சைவத்தமிழ் கலாச்சார ஆய்வுமையம்

CVR Nr: 34661421

விசேட பொதுக்கூட்ட அறிக்கை 09/02/2025

கூட்டம் ஆரம்பம்  15.30

இடம்:- ஆலய திருமணமண்டபம்

சமூகமளித்தவர்கள் 53 பேர்

வணக்கம் கூட்டம 15.30 மணிக்கு அரம்பமாகியது அவைத்தலைவராக திரு சிறிரங்கன் அவர்கள் தெரிவுசெய்யபட்டார் எழுதினராக ரவுத்திரி குகேந்திரமோமன் அவர்கள் தெரிவுசெய்யபட்டார்

தலைவர் திரு லகஷ்மிகாந்தன் அவர்களின் வரவேற்புரையோடு கூட்டம் தொடங்கியது

ஆவணங்கள் ஒப்படைப்பு

ஆவணங்கள் ஒபடைத்தது பற்றி கதைக்கபட்டு 2024 ஆம் ஆண்டு கணக்கறிக்கை உள்ளக கணக்காய்வாளர்களின் பரிசோதனையில் இருப்பதாகவும் அது முடிந்தவுடன்  நிர்வாக சபையிடம் 28/02/2025 முன்  ஒப்படைப்பதாகவும் கூறப்பட்டது

2023ம் ஆண்டு கணக்கறிக்கை  தொலைந்ததால் அது சம்பந்தபட்ட ஆவணங்களை சேகரித்து ஒரு கோப்பாக ஒப்படைப்பதாக திரு கபிலன் அவர்களும் திரு பவாநந்தன் அவர்களும் உறுதியளித்தார்கள்.

மிகுதி ஆவணங்கள் ஒப்படைக்கபட்டதாக ஏற்றுக்கொள்ளபட்டது

ஒளிப்பதிவு இயந்திரம்

ஒளிப்பதிவு இயந்தரம் அழிந்திருப்பது பற்றி கதைக்கபட்டு அழிந்ததை திருப்பி எடுக்கவேணும் என்று  ஆலோசிப்பட்டு அதை எடுப்பற்கு 10000kr செலவழிப்பதெனவும் அதை ஒவருவரிடம் கொடுத்து விசாரிப்பதாகவும் முடிவெடுக்கபட்டது



SRT
9/4-2025

## பூசைமுறை

26/01/25 அன்று நடந்த விசேட பொதுகூட்டதில் அங்கு வந்திருந்தவர்களின் முது ஆதரவுடன் சமஹ்கிருத பூசை ஏற்றுக்கொள்ளபட்டது ஆனாலும் அங்கு வந்தவர்கள் பெரும்பாண்மை இல்லாத காரணத்தால் கூட்டம் பிற்போடப்பட்டு 09/02/25 நடந்த இரண்டாவது பொதுச்சபை கூட்டத்தில் இனிவரும் காலங்களில் சமஷ்கிருத்தில்தான் பூசை நடைபெறுமென ஏகமணதாக தீர்மாணிக்கபட்டது

## யாப்பு மாற்றம் அங்கத்துவபணம் பற்றியது

யாப்பு மாற்றம் சரம் 4:4

அங்கத்துவ காலம் தைமாதம் 1 ம் திகதியில் இருந்து மார்கழி மாதம் 31 ம் திகதிவரை நாட்காட்டி காலமாக இருக்கும்

இனிவரும் காலஙகளில் அங்கத்துவத்துக்கான முழுப்பணமும் தைமாதம் 31ம் திகதிக்கு முன் கட்டபடவேண்டும். தை மாதம் 31ம் திகதிக்கு முன் கட்டாத பட்சத்தில் அவர்களுக்கு மாசி மாதம் 15 ம் திகதிமட்டும் அவகாசம் கொடுக்கபடும் அதற்குள் அவர்கள் பணம் கட்டாத பட்சத்தில் அவர்கள் அங்கத்தவருக்கான உரிமையை இளந்து விடுவார்கள் அங்கத்துவபணம் கட்டச் சொல்லும் அறிவித்தல்கள் வேலமுருகன் ஆலய தளங்களில் அறிவிக்கபடும்.

## SFO கட்டிடம் மறுசீரமைப்பு

தண்ணி ஓடும் குழாய் வெடித்து ஒருவருசமாக தண்ணி ஓடிக்கொண்டிருந்ததால் அதைனை சரிபடுத்த வேலை நடந்துகொண்டு இருப்பதாகவும்

ஆலய கட்டிடத்தில் ஆட்க்கள் தங்குவதற்கு அனுமதி இல்லாத படியால் SFO கட்டிடத்தை திருத்தி அங்கு ஐயாவை தங்கவைக்கலாமென தலைவர் சொன்ன முடிவை பொதுச்சபை ஏற்றுக்கொண்டது

அதற்காக 65000kr முடியுமெனவும் மின்சாரம் வெள்ளையடிப்பது வெப்பமூட்டல் பொன்றவைகள் மேலதிகமாக வருமென சொல்லப்பட்டது கணக்குகள் சரியாக காட்டப்படுமெனவும் சொல்லபட்டது

SFO கட்டிடத்தை மூன்று நான்காக பிரித்து திருத்தி வாடகைக்கு கொடுக்கலாமெனவும் அதை எப்படி திருத்திவது யாருக்கு வாடகைக்கு கொடுப்பது என்பது பிறகு கதைத்து முடிவெடுக்காலாமென கதைக்கபட்டது.

## பாத்திரம் கலுவும் இயந்திரம்

பாத்திரம் கழுவிம் இயந்தரம் வேண்டுவதெனவும் அதனால் தண்ணி மிச்சம் படுத்தலாம் சுத்தமாகவும் கழுவலாம் பிலாஷ்டிக் பொருட்கள் பாவிப்பதை குறைக்கலாம் எனவும் கதைக்கபட்டு வேண்டுவதென முடிவெடுக்கபட்டது



SRT
9/4.2025

## அன்பளிப்பு

ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கும் பொருட்கள் முன் கூட்டியே நிர்வாக சபையுடன் கதைக்கபட்டு அவர்களின் அனுமதியுடன் தான் அனபளிப்பு வழங்கவேண்டுமெனவும் சாமி சிலைகள் இனிமேல் அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளபடாதெனவம் ஆலயத்திற்கு தேவையான பொருட்கள் இருப்பின் ஆலயம் அடியார்களிடம் ஆலய தளங்கள் ஊடாக கேட்டுபெற்றுக்கொள்ளலாமெனவும் முடிவெடுக்கபட்டது.

## பொதுச்சபையின் கேள்விகளும் நிர்வாகத்தின் பதில்களும்

ஆலயத்தில் பல பொருடகள் களவு போவதாகவும்

களவு போகமல் தடுப்பதற்கு ஏற்ற வழிகள் செய்யும் படியும் பொதுச்சபையால் கேட்கபட்டது

அதற்கு நிர்வாகத்தால் பதிலளிக்கபட்டது களவு போவதை தடுப்பதற்கு நிர்வாகம் ஏலுமான முயற்சிகளை செய்யும் ஆனால் முற்று முழுதாக தடுக்கலாமா என்றால் முடியாது என்றே சொல்லவேண்டும் என்று பதிலளித்தது.

பொதுச்சபையில் இருந்த ஒருவர் தான் 7 வருடங்களுக்கு முன் கொடுத்த உழுந்து அரைக்கும் இயந்திரத்தை கானவில்லை என்றும் அது எங்கே என்றும் கேள்வி எழப்பபட்டது அதற்கு அவைத்தலைவர் விசார்த்து சொல்வதாக பதில் சொன்னார்

பொதுச்சபையில் மற்றுமொரு கேள்வியாக கணக்கறிக்கை களவு போனது ஒளிப்பதிவு இயந்திரம் எடுத்துச்செல்லபட்டது கணக்காயவாளர் கணக்கறிக்கையை குடுக்கவேண்டாம் என்று பற்றி சரியான விளக்கங்கள் குடுக்கபடவில்லை என சொன்னார் இது என்னுடைய கேள்வி மாத்திரமே அதற்கு பதில் வேண்டாம் என்றும் சொன்னார் அதனால் சில சல சலப்பு ஏற்பட்டது

அதற்கு அவைத்தலைவர் விளக்கமளிக்கையில் கணக்கு புத்தகம் தொலைந்து போனதற்கு யாரும் ஒன்றும் செய்யமுடியாது ஏழுமானதை எடுத்து கொடுக்கும் படி கேட்டுக்கொண்டார்

Træpiller களவு பொனது தாமதமாக அடியார்களுக்கு அறிவிக்கபட்டது என கேள்வி வந்தது

அதற்கு நிர்வாகம் பதில் கூறுகையில் முதல்நாள் களவு போனது அடுத்தநாள் அறிவிக்க இருந்த நிலையில் அடுத்தநாளும் களவு போனதாலும் காவல்துறையிடம் அறிவித்ததாலும் காலதாமதம் ஆகிவிட்டது என்றும் வேனும் என்றே மறைக்கவில்லை என்று கூறப்பட்டது

## நிர்வாகத்தின் வேண்டுகோள்

ஆலயத்திற்குள் பணம் சேர்க்ககூடாது என்றும்



SRT
9/9 2025

நிர்வாகத்தில் பிழைகள் இருப்பதாயின் நிர்வாக உறுப்பினர் யாரிடமாவது சொல்லுங்கள் உங்களுக்குள் கதைத்து ஒரு பிரயோசனமும் இல்லை என்றும்.

தண்ணிர், மின்சாரம், வெப்பம் ஆகியவற்றை ஏழக்கூடிய அளவுக்கு மிச்சம் பிடியுங்கள் என்றும் நிர்வாகத்தினரால் கோரிக்கை வைக்கபட்டது

இத்துடன் கூட்டம் முடிவடைந்தது

அவைத்தலைவர்.

Surgan 7.
9/9-2025

எழுதுனர்

Rogendran
9/9/2025



SKT
9/9-2025